**திருவண்ணாமலை, வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**

**வழங்குநர்– திரு.க. முருகன்,பி.எஸ்ஸி(விவ).,எம்பிஏ.,பிஜிடிஜெஎம்சி.,**

**ந.க.அ2/ 2780/2019**

**நாள்.06.11.2019**

பொருள்– பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அமைச்சுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி–4ல் அடங்கிய பணிகள் – நேரடித் தேர்வு மூலம் 2015–16, 2016–17 மற்றும் 2017–18 ஆம் ஆண்டிற்கான இளநிலை உதவியாளர் (பிணையம்) / கிடங்கு மேலாளர் (தரம்.3) பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு வேளாண்மைத் துறைக்கு ஒதுக்கப்பட்டவர்களுக்கு நியமன ஆணைகள் வழங்கியது – இளநிலை உதவியாளர் (பிணையம்) / கிடங்கு மேலாளர் (தரம்.3) பதவியில் பணிவரன்முறை செய்வது – தொடர்பாக.

பார்வை– 1. சென்னை–5, வேளாண்மை இயக்குநர் அலுவலக வேளாண்மை கூடுதல் இயக்குநர் (பணி மேலோண்மை) அவர்களின் செயல்முறை ஆணைகள் எண். அநிபி.5/ 139388 /2018, நாள்.01.03.2019.

2. இவ்வலுவலகச் செயல்முறை ஆணை எண்.அ2/2780/2019, நாள்.06.03.2019

----

ஆணை :–

பார்வை 1–ல் காணும் செயல்முறை ஆணைகளின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினால் 2015–2018–ம் ஆண்டிற்கான தொகுதி 4–ல் அடங்கிய பணிகளுக்கு நேரடி போட்டித் தேர்வின் மூலம் இளநிலை உதவியாளர் (பிணையம்) / கிடங்கு மேலாளர் (தரம்.3) பதவிக்கு தற்காலிகமாக தேர்ந்தெடுக்கப்பட்டு, ரூ.19500–62000 (புதிய ஊதிய விகிதம்) என்ற ஊதிய விகிதத்தில் இளநிலை உதவியாளர் (பிணையம்) / கிடங்கு மேலாளர் (தரம் 3) பணி நியமன ஆணை வழங்கிடும் பொருட்டு, இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட, ஐந்து (5) தேர்வர்களுக்கு பார்வை 2–ல் காணும் செயல்முறை ஆணையின்படி இளநிலை உதவியாளர் (பிணையம்) / கிடங்கு மேலாளர் (தரம்.3) பணிநியமனம் வழங்கப்பட்டு, பணியில் சேர்ந்து கொண்டதைபடுத்து, ஐந்து (5) பணியாளர்களுக்கும் இளநிலை உதவியாளர் (பிணையம்) / கிடங்கு மேலாளர் (தரம்.3) பதவியில் கீழ்க்குறித்த விவரப்படி பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

| வ. எண் | பெயர் / பதவி ( திருவாளர்கள்) | பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1. | எஸ். அருள்சின்னப்பன் கிடங்கு மேலாளர் (தரம்.3) | துணை வேளாண்மை விரிவாக்க மையம், பாச்சல், செங்கம். | 11.03.2019 முற்பகல் | 11.03.2019 முற்பகல் |
| 2. | எஸ்.சிவந்தன் கிடங்கு மேலாளர் (தரம்.3) | துணை வேளாண்மை விரிவாக்க மையம், பெரியகுளம் புதுப்பாளையம். | 12.03.2019 முற்பகல் | 12.03.2019 முற்பகல் |

| வ. எண் | பெயர் / பதவி ( திருவாளர்கள்) | பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 3. | எ.அம்மு கிடங்கு மேலாளர் (குரம்.3) | வேளாண்மை விரிவாக்க மையம், அனக்காவூர் அனக்காவூர். | 11.03.2019 முற்பகல் | 11.03.2019 முற்பகல் |
| 4. | ஜெ. கார்த்திகேயன் கிடங்கு மேலாளர் (குரம்.3) | துணை வேளாண்மை விரிவாக்க மையம், தேவிகாபுரம் மேற்கு ஆரணி. | 14.03.2019 முற்பகல் | 14.03.2019 முற்பகல் |
| 5. | ஆர்.ரவிக்குமார் கிடங்கு மேலாளர் (குரம்.3) | துணை வேளாண்மை விரிவாக்க மையம், வடமாதிமங்கலம் சேத்துப்பட்டு. | 13.03.2019 முற்பகல் | 13.03.2019 முற்பகல் |

மேற்காணும் பணியாளர்களை மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில், இரண்டாண்டு பணிக்காலம் தகுதிகாண் பருவத்தில் வைத்தும், இவர் தகுதிகாண் பருவம் முடித்தமைக்கான உத்தரவு வழங்கிய பின்னரே இரண்டாவது மற்றும் அதனைத் தொடர்ந்த ஊதிய உயர்வுகள் வழங்கப்படும் எனவும் உத்தரவிடப்படுகிறது.

மேற்காணும், பணிவரன்முறை உத்தரவு மாண்புமிகு, சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மதுரை உயர்நீதிமன்றக்கிளையில் நிலுவையில் உள்ள தொகுதி 4ல் அடங்கிய பணிகளில் 2015–16, 2016–17 மற்றும் 2017–18 வரையிலான காலங்களில் வழங்கப்பட்ட பணிநியமனங்கள் மீது தொடரப்பட்ட வழக்குகளின் இறுதி தீர்ப்பிற்குட்பட்டது என்ற நிபந்தனையுடன் வழங்கப்படுகிறது.

ஒம்/–க.முருகன்,
வேளாண்மை இணை இயக்குநர்
திருவண்ணாமலை.

பெறுநர்

மேற்படி பணியாளர்கள்.

நகல் – வேளாண்மை உதவி இயக்குநர்கள், செங்கம், புதுப்பாளையம், அனக்காவூர், மேற்கு ஆரணி, சேத்பட்

நகல்– வேளாண்மை இயக்குநர், சென்னை – தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது(அ.நி.பி.5)

நகல்– அ2 முக்கிய ஆணைத்தொகுப்பிற்கு.

// உத்திரவுப்படி //

ஆட்சி அலுவலர்